# முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகள் [1]

## (2024ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டிற்கான பொருளாதார மீளாய்விற்கான குறைநிரப்பியொன்றாக வெளியிடப்பட்டுள்ளது)

**நாணயக் கொள்கை**

2024 பெப்புருவரி 09 - 2024 பெப்புருவரி 16 தொடக்கம் ஆரம்பிக்கின்ற ஒதுக்குப் பேணுதல் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில், துணைநில் கடன்வழங்கல் வசதி மீதான வரையறைகள் நீக்கப்பட்டு துணைநில் வைப்பு வசதி மீதான வரையறைகள் நாட்காட்டி மாதமொன்றில் ஐந்து தடவைகளிலிருந்து பத்து தடவைகளுக்கு தளர்த்தப்பட்டன.[2]

2024 மாச்சு 26 - 2024 ஏப்பிறல் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில், துணைநில் வைப்பு வசதியின் பயன்பாடு மீதான எஞ்சியிருக்கும் வரையறைகள் நீக்கப்பட்டன.

- துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே, 50 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டு, 8.50 சதவீதமாகவும் 9.50 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டன.

2024 யூலை 24 - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 25 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டு 8.25 சதவீதமாகவும் 9.25 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டன.

2024 நவெம்பர் 27 - மத்திய வங்கி அதன் இரட்டைக் கொள்கை வட்டி வீத பொறிமுறையிலிருந்து ஒற்றைக் கொள்கை வட்டி வீத பொறிமுறைக்கு நகர்ந்தது. இதற்கமைய, மத்திய வங்கியின் முதன்மை நாணயக் கொள்கை கருவியாக அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை சமிக்ஞை செய்வதற்கும் தொழிற்படுத்துவதற்கும் ஓரிரவு கொள்கை வீதம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், 50 அடிப்படைப் புள்ளிக் குறைப்பினைப் பிரதிபலிக்கும் வகையில், 8.00 சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்டது. மேலும், துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும், ± 50 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட எல்லையுடன் ஓரிரவு கொள்கை வீதத்திற்கு இணைக்கப்பட்டு முறையே 7.50 சதவீதமாகவும் 8.50 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டன[3].

[1] 2024 சனவரி 01 தொடக்கம் 2025 மாச்சு 15 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகள் மற்றும் அண்மைய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கை வழிமுறைகளையும் உள்ளடக்குகின்றது.

[2] மத்திய வங்கியின் துணைநில் வசதிகள் தொடர்பில் பங்கேற்கும் நிறுவனங்களில் பெரும்பாலும் தங்கியிருப்பதை குறைப்பதை நோக்காகக் கொண்டு, 2023 சனவரி 16 தொடக்கம் துணைநில் வசதிகள் தொடர்பான மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

[3] துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வீதமும் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களாக இனிமேல் கருதப்படமாட்டாது. இருப்பினும், இவை பங்கேற்கும் நிறுவனங்களுக்கான துணைநில் வசதிகளுக்கு ஏற்புடைய வீதங்களாக தொடர்ந்தும் பணியாற்றும்.

**விசேட கொடுகடன் திட்டங்கள்**

2024 சனவரி 03 - எதிர்காலத்தில் புதிய அரசாங்கத்தினதும் நன்கொடையாளரினதும் நிதியுதவி கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தாதிருக்க இலங்கை மத்திய வங்கியின் ஆளும் சபை கொள்கை தீர்மானத்தை எடுத்தது. எனினும், அத்திட்டங்கள் பூர்த்தியடையும் வரை ஏற்கனவேயுள்ள கடன்திட்டங்களை மத்திய வங்கி தொடர்ந்தும் செயல்படுத்தும்.

- 2025 பருகாலம் Iஇலிருந்து புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தை வசதிப்படுத்தாதிருக்க நிதி அமைச்சிற்கான கொடுகடன் உத்தரவாத நிதியத்தை மீளளிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளும் சபை கொள்கை தீர்மானத்தை எடுத்தது.

2024 ஓகத்து 28 - வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் மற்றும் பெற்றோர் ஆகியோருக்கு மேலதிகமாக ‘‘உடன்பிறந்தோரை’’ உடனடி குடும்ப உறுப்பினராக உள்ளடக்கும் வகையில், இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ‘‘மனுசவி’’ கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

2024 சனவரி 17 - ஜஸ்ட்பே இயலச்செய்யப்பட்ட செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு செயலிகள் 2024 ஏப்பிறல் 01 தொடக்கம் ரூ.10,000 தொகைக்கு சமனானதாக அல்லது அதை விஞ்சுகின்ற கொடுக்கல்வாங்கல்களுக்காக செயலியுடன் இணைக்கப்பட்டுள்ள கணக்கின் நிதியியல் நிறுவனத்திடமிருந்து ஒரு தடவை கடவுச்சொல்லொன்றைக் கோருவதை இலங்கை மத்திய வங்கி கட்டாயமாக்கியது. செல்லிடத் தொலைபேசி செயலியைப் பயன்படுத்தி பயனர் எந்தவொரு நிதியியல் நிறுவனத்திலிருந்தும் தமது கணக்குகளை இணைப்பதையும் இணைக்கப்பட்ட கணக்குகளிலிருந்து நிதியங்களைப் பெறுவதன் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதையும் ஜஸ்ட்பே வசதிப்படுத்துகின்றது.

2024 பெப்புருவரி 01 - நேபாள்பே கியூஆர் செல்லிடத் தொலைபேசி செயலிகளின் மூலம் நேபாள சுற்றுலாப் பயணிகளினால் மேற்கொள்ளப்படும் லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களை ஏற்றுக்கொள்வதற்கான நேபாள் கிளியரிங் ஹவுஸ் லிமிடெட்டுடன் இணைவதற்கு லங்காபே (பிறைவட்) லிமிடெட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

2024 ஏப்பிறல் 20 - 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தேசிய

கொள்கைகள் அமைச்சரினால் 2024ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குநர் ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன. இதற்கமைய, 2024 யூன் 3 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில், அனைத்து பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குநர்களும் பதிவுசெய்யப்பட்டு அத்துடன் கண்காணிக்கப்பதற்கு இவ்வொழுங்குவிதிகள் தேவைப்படுத்துவதுடன் பதிவுசெய்யப்படாத அல்லது உரிமமளிக்கப்படாத பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குநர்கள் தமது தொழிற்பாடுகளை முறைசார்படுத்துவதற்கும் முறையான வழிகளினூடாக பண மாற்றல் தொழிலில் ஈடுபடுத்துவதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2024 திசெம்பர் 03 - 2025 மாச்சு 31 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில், வாடிக்கையாளர்களின் நடைமுறைக் கணக்குகளை/சேமிப்புக் கணக்குகளை அதிகாரமளிக்கப்படாத பெறுவழியிலிருந்து பாதுகாப்பதற்கு கொடுப்பனவு செயலிகளைப் பதிவுசெய்கின்ற போது பயனாளரை அடையாளங்கண்டு, பயனாளர்களினால் வழங்கப்படும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்குமான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான பொறிமுறையொன்றை தாபிக்குமாறு அனைத்து செல்லிடக் கொடுப்பனவு செயலி வழங்குநர்களையும் மத்திய வங்கி அறிவுறுத்தியது. மேலும், ஜஸ்ட்பே இயலச்செய்யப்பட்ட கொடுப்பனவு செயலிக்கு நடைமுறைக் கணக்கொன்றுடன்/சேமிப்புக் கணக்கொன்றுடன் இணைக்கின்ற போது கொடுப்பனவு செயலியின் பயனாளரும் நடைமுறைக் கணக்கு/சேமிப்புக் கணக்கின் உரிமையாளரும் அதே ஆள் என்பதை செல்லிடக் கொடுப்பனவு செயலி வழங்குநர்கள் உறுதிசெய்யுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

2024 திசெம்பர் 20 - லங்காகியூஆரினை ஊக்குவித்து, நிதியியல் நிறுவனங்களை ஊக்கப்படுத்துவதற்கு 2025 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களின் உயர்ந்தபட்ச வணிகர் கழிவு வீதம், கொடுக்கல்வாங்கல் தொகை 1சதவீதத்திற்கு மீளமைக்கப்பட்டது. மேலும், லங்காகியூஆரின் உயர்ந்தபட்ச கொடுக்கல்வாங்கல் வரையறை, ரூ.200,000 இலிருந்து ரூ.500,000 இற்கு அதிகரிக்கப்பட்ட அதேவேளை லங்காகியூஆரின் குறைந்தபட்ச கொடுக்கல்வாங்கல் வரையறை ரூ.10இலிருந்து ரூ.1 இற்கு குறைக்கப்பட்டது.

2025 சனவரி 27 - டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களைப் பின்பற்றுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, உள்ளகத் தகவல் தொழில்நுட்ப முறைமை இல்லாத அரச நிறுவனங்களுக்கு டிஜிட்டல் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான தளமான GovPay இன் மூலம் செய்யப்படும் கொடுப்பனவுகளுக்கு 2025 பெப்புருவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் ரூ.15 கொண்ட உயர்ந்தபட்ச கொடுக்கல்வாங்கல் கட்டணத்தை இலங்கை மத்திய வங்கி கட்டாயப்படுத்தியது.

2025 பெப்புருவரி 07 - 2025 பெப்புருவரி 15 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில், பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் தொடர்புடைய உறுப்பினரின் இணையவழி வங்கித்தொழில், செல்லிட வங்கித்தொழில் மற்றும் தன்னியக்க கூற்றுப்பொறி என்பனவற்றின் ஊடாக மேற்கொள்ளப்படும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி கொடுக்கல்வாங்கலொன்றில் விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்ச கட்டணமாக ரூ.25 இனை விதிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்தது. மேலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம் போன்ற நிறுவனங்களுக்கு கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு வசதிப்படுத்துகின்ற லங்காபே இணையவழி கொடுப்பனவு தளத்தினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் விதிக்கப்படும் உயர்ந்தபட்சக் கட்டணம் கொடுக்கல்வாங்கலொன்றுக்கு ரூ.25இனை விட விஞ்சலாகாது என்று தீர்மானிக்கப்பட்டது.

**பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்**

2024 ஏப்பிறல் 01 - சுற்றறிக்கை 01/2024 – 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்யையிடல் சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல்.

2024 செத்தெம்பர் 05 - சுற்றறிக்கை 02/2024 – நிதியியல் நிறுவனங்களுக்கான வாடிக்கையாளர் உரியவிழிப்புக் கவனம் தொடர்பிலான விதிகளுடன் இணங்கியொழுகுதல்.

2024 செத்தெம்பர் 19 - சுற்றறிக்கை 02அ/2024 – காப்புறுதிக் கம்பனிகளுக்கான வாடிக்கையாளர் உரியவிழிப்புக் கவனம் தொடர்பிலான விதிகளுடன் இணங்கியொழுகுதல்.

2024 ஒத்தோபர் 02 - சுற்றறிக்கை 03/2024 – 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்யையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் நிறுவனம்சார் இணங்குவித்தலை உறுதிசெய்தல்.

2024 நவெம்பர் 04 - சுற்றறிக்கை 04/2024 – 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்யையிடல் சட்டம் மற்றும் 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபார (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன) விதிகள் என்பனவற்றுடன் இணங்கியொழுகுதல்.

**வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம் மற்றும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள்**

2024 சனவரி 01 - 2024 யூன் 30 வரை விசேட வெளிநாட்டு நாணயக் கணக்குகளை திறப்பதற்கான செல்லுபடியாகும் காலத்தை நீடித்து, ‘நடைமுறை கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு இக்கணக்குகள் - முதலீட்டைப்பெறுபவர்’ மீது வழங்கப்பட்ட 2023 பெப்புருவரி 27 அன்று திகதியிடப்பட்ட 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகளை திருத்துவதற்கு, 2017ஆம் ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

2024 பெப்புருவரி 15 - 2021ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் கீழ் உரிமம்பெற்ற தீர்வகமொன்றின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட விதிகளின் நியதிகளின் பிரகாரம், ‘‘பிணையங்களை கடன்பெறுதல் மற்றும் கடன்வழங்குதல்’’ கொடுக்கல்வாங்கல்களின் கீழ் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட ஏதேனும் பிணையங்களை பிணையுறுதியாக கையகப்படுத்துவதற்கு, வைத்திருப்பதற்கு, உரிமைமாற்றுவதற்கு அல்லது வாக்குறுதியளிப்பதற்கு வதிவற்றோருக்கு அனுமதித்து, திருத்தப்பட்டவாறு, 2213/35ஆம் இலக்க 2021 பெப்புருவரி 03 அன்று திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஒழுங்குவிதிகளை திருத்துவதற்கு, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2371/33ஆம் இலக்க 2024 பெப்புருவரி 15 அன்று திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள், பிரிவு 29இன் கீழ் வழங்கப்பட்டன. இவ்வழிமுறையை கருத்திற்கொண்டு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2024 மார்ச் 20 அன்று 2024ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

2024 பெப்புருவரி 16 - வதிவிடக் கம்பனி போதியளவு வெளிநாட்டுச் செலாவணி மீதிகளை/காசுப் பாய்ச்சல்களை கொண்டிராதவிடத்து, வதிவற்றோரிடமிருந்து மூன்று ஆண்டுகாலங்களை விடவும் குறைவான தவணையுடன் கூடிய கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கான அனுமதியை நீக்கி, இலங்கை ரூபாவாக மாற்றுவதன் மூலம் அத்தகைய ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களுக்காக வதிவற்றோருக்கு மீள்கொடுப்பனவுகளை செலுத்தவதற்கு அனுமதித்து, திருத்தப்பட்டவாறு, 2213/35ஆம் இலக்க 2021 பெப்புருவரி 03ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஒழுங்குவிதிகளை திருத்துவதற்கு 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2371/48ஆம் இலக்க பெப்புருவரி 16ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் பிரிவு 29இன் கீழ் வழங்கப்பட்டன. இவ்வழிமுறையை கருத்திற்கொண்டு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2024 மார்ச் 20 அன்று 2024ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

- முதலீட்டைப் பெறுபவர் போதியளவு வெளிநாட்டுச் செலாவணி மீதிகளை/காசுப் பாய்ச்சல்களை கொண்டிராதவிடத்து, இலங்கை ரூபாவிற்கு மாற்றுவதன் மூலம், வதிவற்றோர் வசமுள்ள பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்களின் அல்லது பட்டியலிடப்பட்ட பங்குகளின் வருமானத்தை அல்லது முதிர்ச்சிப் பெறுகைகளை செலுத்துவதற்கு அனுமதித்து, திருத்தப்பட்டவாறு, 2213/35ஆம் இலக்க 2021 பெப்புருவரி 03 அன்று திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஒழுங்குவிதிகளை திருத்துவதற்கு, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 07ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2371/49ஆம் இலக்க 2024 பெப்புருவரி 16 அன்று திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் ஒழுங்குவிதிகள் 29ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டன. இவ்வழிமுறையை கருத்திற்கொண்டு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2024 மார்ச் 20 அன்று 2024ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.
- வதிவற்றோரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்பெறுகைகளைப் பயன்படுத்தி நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் முதலீடு செய்வதற்கு வதிவிட நிறுவனங்களுக்கான அனுமதியைக் கருத்திற்கொண்டு, 2021ஆம் ஆண்டின் யூன் 30இன் 2234/20ஆம் இலக்க அதிவிசேட

வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கு 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 07ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2371/50ஆம் இலக்க 2024 பெப்புருவரி 16 அன்று திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் பிரிவு 29இன் கீழ் வழங்கப்பட்டன.

2024 யூன் 18 - 2363/26ஆம் இலக்க 2023 திசெம்பர் 20 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட, முன்னைய கட்டளையின் கீழ் விதிக்கப்பட்ட பல்வேறு மூலதனப் பாய்ச்சல் வழிமுறைகளை தளர்த்தி, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ், 2389/08ஆம் இலக்க 2024 யூன் 18 அன்று திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட கட்டளை வழங்கப்பட்டது.

2024 யூலை 01 - முன்னைய விதிகளில் குறித்துரைக்கப்பட்டிருந்த, ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியவற்றுக்கு அடுத்துவரும் மாதத்தின் 07ஆம் நாளைக் கொண்ட காலப்பகுதிக்கு எதிராக கிடைப்பனவு திகதியிலிருந்து மூன்று நாற்காட்டி மாதங்களின் முடிவடைதலைத் தொடர்ந்துவரும் (கிடைக்கப்பெறும் மாதம் உள்ளடங்கலாக) மாதத்தின் 10ஆம் நாளுக்கான கட்டாய மாற்றுத் தேவைப்படுத்தல் காலப்பகுதியை நீடித்து, 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2391/02 ஆம் இலக்க 2024 யூலை 01 அன்று திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட “2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்தியனுப்புதல் விதிகள்” வழங்கப்பட்டன. பாராளுமன்ற அங்கீகாரத்தின் பின்னர், 2024 செத்தெம்பர் 04 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இவ்விதிகள் நடைமுறைக்கு வந்தன.

2024 ஓகத்து 01 - குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட விசா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வதிவிட விசாவினைப் பெற்றுக்கொள்கின்ற வெளிநாட்டவர்கள் மேற்கொள்ளும் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தி, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2024ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணிப்புரைகள் மற்றும் 2024ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

2024 திசெம்பர் 19 - 2389/08ஆம் இலக்க 2024 யூன் 18 அன்று திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முன்னைய கட்டளையின் கீழ் விதிக்கப்பட்ட மூலதனப் பாய்ச்சல் வழிமுறைகளை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கும் அதேவேளை அவ்வழிமுறைகளின் குறிப்பிட்ட குறைபாடுகளை நிவர்த்திசெய்து, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் 2415/56ஆம் இலக்க 2024 திசெம்பர் 19 அன்று திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை வழங்கப்பட்டது.

**படுகடன் முகாமைத்துவம்**

2024 மாச்சு 11

- திறைசேரி உண்டியல் ஏலங்களின் கட்டம் IIஇன் போது வழங்கப்பட்ட தொகை, 2024 மாச்சு 07 அன்று வழங்கப்பட்ட திருத்தப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில், கட்டம் Iஇல் கூட்டு ஏலப் பற்றாக்குறை மற்றும் வழங்கப்பட்ட கூட்டுத்தொகையின் 10 சதவீதம் அல்லது ரூ. 5.0 பில்லியனாக (இதில் எது உயர்வாக காணப்படுகின்றதோ அது) குறைக்கப்பட்டு 2024 மாச்சு 11 அன்று தொடக்கம் நடைமுறைக்கு வந்தது. - திறைசேரி முறி ஏலங்களின் நேரடி வழங்கல் இடைவெளியில் முன்வைக்கப்பட்ட தொகை, 2024 மாச்சு 11 தொடக்கம் நடைமுறைக்கு வந்த 2024 மாச்சு 07 அன்று வழங்கப்பட்ட திருத்தப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில் கட்டம் Iஇல் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கங்களிலிருந்து முன்வைக்கப்பட்ட தொகையின் 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டுள்ளது.
- திறைசேரி உண்டியல் ஏலங்களின் கட்டம் IIஇன் போது வழங்கப்பட்ட தொகை, 2024 மாச்சு 07 அன்று வழங்கப்பட்ட திருத்தப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில், கட்டம் Iஇல் கூட்டு ஏலப் பற்றாக்குறை மற்றும் வழங்கப்பட்ட கூட்டுத்தொகையின் 10 சதவீதம் அல்லது ரூ. 5.0 பில்லியனாக (இதில் எது உயர்வாக காணப்படுகின்றதோ அது) குறைக்கப்பட்டு 2024 மாச்சு 11 அன்று தொடக்கம் நடைமுறைக்கு வந்தது. - திறைசேரி முறி ஏலங்களின் நேரடி வழங்கல் இடைவெளியில் முன்வைக்கப்பட்ட தொகை, 2024 மாச்சு 11 தொடக்கம் நடைமுறைக்கு வந்த 2024 மாச்சு 07 அன்று வழங்கப்பட்ட திருத்தப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில் கட்டம் Iஇல் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கங்களிலிருந்து முன்வைக்கப்பட்ட தொகையின் 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டுள்ளது.

2024 ஏப்பிறல் 01 - அரசப் பிணையங்களின் முதலீடுகளின் அச்சிடப்பட்ட காலாந்திர கூற்றுக்களை அனுப்புவது நிறுத்தப்பட்டு,
லங்காசெக்குயர் முறைமையிலுள்ள அனைத்துப் பிணையங்கள் கணக்கு உடைமையாளர்களுக்கும்
செல்லுபடியாகும் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவுசெய்வது கட்டயமாகவுள்ள இ-கூற்று வசதிக்கு
முழுமையாக மாற்றுவதன் மூலம் பதிலீடு செய்யப்பட்டது.

2024 திசெம்பர் 20 - வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் பரிமாற்றம் தகைமையுடைய முறி உடைமையாளர்களின் 97.86 சதவீதம் கொண்ட பங்கேற்புடன் செயற்படுத்தப்பட்டது.

- பரிமாற்றத்தின் போது, கீழே கொடுக்கப்பட்டவாறு நான்கு (04) படிப்படியாக அதிகரிக்கும் பேரண்ட இணைக்கப்பட்ட முறிகள், ஒரு படிப்படியாக அதிகரிக்கும் ஆளுகை இணைக்கப்பட்ட முறி, ஒரு படிப்படியாக அதிகரிக்கும் ஐ.அ.டொலர் முறி மற்றும் 2028ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைகின்ற கடந்த செலுத்தவேண்டிய வட்டியை

| **விபரம்** | **நறுக்கு வீதம் (%)** | **முதன்மை தொகை (ஐ.அ. டொலர்கள்)** |
|---|---|---|
| 2028இல் செலுத்தவேண்டிய கடந்த வட்டி முறிகள் | 4.0 | 1,647,735,257 |
| 2030இல் செலுத்தவேண்டிய படிப்படியாக அதிகரிக்கும் பேரண்ட இணைக்கப்பட்ட முறிகள் | 3.1 | 1,086,993,557 |
| 2033இல் செலுத்தவேண்டிய படிப்படியாக அதிகரிக்கும் பேரண்ட இணைக்கப்பட்ட முறிகள், | 3.35 | 2,132,120,275 |
| 2036இல் செலுத்தவேண்டிய படிப்படியாக அதிகரிக்கும் பேரண்ட இணைக்கப்பட்ட முறிகள் | 3.6 | 999,165,345 |
| 2038இல் செலுத்தவேண்டிய படிப்படியாக அதிகரிக்கும் பேரண்ட இணைக்கப்பட்ட முறிகள் | 3.6 | 1,999,171,191 |

| | | |
|---|---|---|
| 2035இல் செலுத்தவேண்டிய படிப்படியாக அதிகரிக்கும் ஆளுகை இணைக்கப்பட்ட முறிகள் | 3.6 | 1,439,672,065 |
| 2038இல் செலுத்தவேண்டிய படிப்படியாக அதிகரிக்கும் ஐ.அ.டொலர் முறிகள் | 1.0 | 1,126,487,250 |

*மூலம்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு*

மேலே குறிப்பிட்டதற்கு மேலதிகமாக, வழங்கப்பட்ட தற்போதுள்ள முறிகளின் தொகுதியுடன் தொடர்புடைய பரிவர்த்தனை வழங்கலின் காலக்கெடுவில் அல்லது அதற்கு முன்னதாக செல்லுபடியாகும் வகையில், அறிவுறுத்திய முறி உடைமையாளர்களுக்கு பரிவர்த்தனை கட்டணத்தை வழங்குவதற்கு, 2024ஆம் ஆண்டில் செலுத்தவேண்டிய ஐ.அ.டொலர் 215,237,873 இற்கு ஐ.அ.டொலர் பெயர்குறிக்கப்பட்ட ‘‘செலாவணி கட்டண’’ முறிகள் வழங்கப்பட்டன. மேலும், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மறுசீரமைப்பிற்கான உள்நாட்டு தெரிவை நடைமுறைப்படுத்துவதற்கு, ரூ.155,728.6 மில்லியன் கொண்ட தொகைக்கு துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் இணைக்கப்பட்ட எட்டு (08) புதிய திறைசேரி முறிகள் வழங்கப்பட்டன.

2024 திசெம்பர் 30 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனக் கடன்களை மறுசீரமைப்பதில் ஐந்து (05) புதிய துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் இணைக்கப்பட்ட திறைசேறி முறிகளை வழங்குவதன் மூலம் இலங்கை ரூபா கடன் தீர்ப்பனவை நடைமுறைப்படுத்தல்.

**நிதியியல் துறை**

**உரிமம்பெற்ற வங்கிகள்**

2024 பெப்புருவரி 29 - முறையே பிரைஸ்வோட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் மற்றும் எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் போன்ற மேலே குறிப்பிடப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களின் பெயர்களை டெலோய்ட் பார்ட்னர்ஸ் மற்றும் டெலோய்ட் அசோசியேட்ஸ் என்று மாற்றுவதன் மூலம் “உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு தகைமையுடைய கணக்காய்வாளர்களின் பட்டியல்” மீதான 2019ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 2024 மார்ச் 25 | - | வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்ததன்மையை உறுதிசெய்து பொதுமக்கள் நம்பிக்கையைப் பாதுகாக்கும் பொருட்டு, கொடுகடன் திரட்சி இடர்நேர்வுகளை தணிப்பதை நோக்காகக்கொண்டு, 2026 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் ‘‘உரிமம்பெற்ற வங்கிகளின் பாரியளவிலான கொடுகடன் வெளிப்படுத்துகைகள்’’ மீது வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2024 மார்ச் 28 | | அசாதாரண பேரண்டப்பொருளாதார சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் நிலைபெறத்தக்க பொருளாதார மீட்பினை வசதிப்படுத்தி, உரிமம்பெற்ற வங்கிகளின் அதிகரித்த அளவில் பெறுமதியிழக்கப்பட்ட சொத்துத்தரத்தை உரியவாறு கையாளுவதை உறுதிசெய்கின்ற அதேவேளை வியாபார மீட்புப் பிரிவுகளாக உரிமம்பெற்ற வங்கிகளின் கொவிட்-19இற்கு பின்னர் ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ள மீட்புப் பிரிவுகளை வலுப்படுத்தி மீளஉருவாக்குவதை நோக்காகக் கொண்டு, ‘‘உரிமம்பெற்ற வங்கிகளின் வியாபார மீட்புப் பிரிவுகளை தாபிப்பதற்கான வழிகாட்டல்கள்’’ மீதான சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2024 ஏப்பிறல் 15 | - | உரிமம்பெற்ற வங்கிகள் கடன்வழங்கல் வீதங்களை மேலும் குறைப்பதற்கு வாய்ப்பினை வழங்கியுள்ள நாணயக் கொள்கைகளும் நாணய நிலைமைகளும் குறிப்பிடத்தக்களவில் தளர்ந்ததைக் கருத்திற்கொண்டு, ‘‘ரூபாய் பெயர்குறிக்கப்பட்ட கடன்வழங்கல் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்’’ தொடர்பில் 2023 ஓகத்து 25ஆம் திகதியிடப்பட்ட 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளை இரத்துச்செய்யப்பட்டது. |
| 2024 யூன் 13 | - | 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) மூலம் திருத்தப்பட்டவாறு, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 21(1) மற்றும் 76(ஏ)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம், நியதி திரவத்தன்மைச் சொத்துக்களின் விகிதங்களைப் பேணுவதை இடைநிறுத்தி, வங்கிகளின் நியதித் திரவத்தன்மை விகிதங்களாக, திரவத்தன்மை உள்ளடக்க விகிதத்தையும் தேறிய நிலையான நிதியிடல் விகிதத்தையும் ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் பேணுதல் வேண்டும் என்பதை தீர்மானித்து, ‘‘உரிமம்பெற்ற வங்கிகளின் நியதித் திரவத்தன்மை விகிதங்கள்’’ மீதான வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் வழங்கப்பட்டது. |

2024 யூன் 14 - 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) சட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன், ‘‘உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில்’’ மீது வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரங்கள், கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தை கொண்டு நடத்தும் நோக்கத்திற்காக தகைமையுடைய வாடிக்கையாளர்கள், அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள், மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தின் கீழ் கடன்வசதியை வழங்குதல் போன்றனவும் இப்பணிப்புரைகளில் குறித்துரைக்கப்படுகின்றன. மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளுக்கு ஏற்புடைய கட்டளைகள் மற்றும் ஏனைய அறிவுறுத்தல்களை இடைநிறுத்தி, (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) வங்கித்தொழில் சட்டக்கட்டளை வழங்கப்பட்டது.

- 2024 யூன் 15 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தை கொண்டுநடத்தும் நோக்கத்திற்காக வெளிநாட்டு நாணயங்களின் பெயர்குறித்து, வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம்) கட்டளை வழங்கப்பட்டது.

2024 யூன் 15 - உரிமம்பெற்ற வங்கிகளுக்கான சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு வரைவுசெய்யப்பட்ட வங்கித்தொழில் (திருத்த) சட்டமூலமானது 2024 ஏப்பிறல் 02 அன்று பாராளுமன்றத்தினால் அனுமதியளிக்கப்பட்டு 2024 யூன் 15ஆம் நியமனத் திகதி அன்று 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்த) சட்டமாக தொழிற்பாட்டிற்கு வந்தது. ஏனையவற்றுக்கு மத்தியில், குறைந்தபட்ச உரிமப்படுத்தல் தேவைப்பாடுகள், ஆர்வலர் பொருத்தப்பாட்டிற்கான பிரமாணம், வங்கி சொத்துடைமை, கையேற்புகள், இணைப்புகள் மற்றும் ஒருங்கிணைப்பு, ஒருங்கிணைக்கப்பட்ட மேற்பார்வை, விகிதாசாரத்தன்மை, கணக்குகள் மற்றும் கணக்காய்வு மீதான தேவைப்பாடுகள், பாரிய கொடுகடன் வெளிப்படுத்துகை, தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள், நிறுவன ஆளுகை, கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் போன்ற விடயப் பரப்புகளை இத்திருத்தங்கள் வலுப்படுத்துகின்றன.

2024 யூன் 28 - 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்த) சட்டத்துடன் இசைந்துசெல்லும் விதத்தில், உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் நிறைவேற்று தொழிற்பாடுகளை செயற்படுத்தும் அலுவலர்கள் ஆகியோரின் பொருத்தம் மற்றும் தகுதி மதிப்பீட்டிற்கான தீர்மானங்களை வலுப்படுத்தும் பொருட்டு, இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ள

சத்தியக்கடதாசி மாதிரிகளை திருத்தம்செய்து, ‘‘இலங்கையில் உரிமம்பெற்ற வங்கிகளின் பொருத்தம் மற்றும் தகுதியின் மதிப்பீடு’’ மீது 2019ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் மற்றும் ‘‘உரிமம்பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் நிறைவேற்று தொழிற்பாடுகளை செயற்படுத்தும் அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியின் மதிப்பீடு’’ மீதான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் என்பவற்றுக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன.

2024 யூலை 19 - தேசிய கொடுகடன் உத்தரவாத நிறுவனத்தினால் உத்தரவாதம் வழங்கப்பட்ட கொடுகடன்களுக்கு 20 சதவீத இடர்நேர்வு நிறையேற்றத்தை ஏற்படுத்துவதுடன், நிதியியல் நிறுவனங்களின் குறிகாட்டி பட்டியலிலுள்ள வரையறுக்கப்பட்ட தேசிய கொடுகடன் உத்தரவாத நிறுவனம் உள்ளடங்கலாக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் போன்றவற்றுக்கான பாசல்III இன் கீழ் மூலதனத் தேவைப்பாடுகள்’’ மீது 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன.

2024 ஓகத்து 30 - தொடர்புடைய ஆர்வலர்களுடனான ஆலோசனையோடு, நிதி, திட்டமிடல், மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இலங்கையில் ‘‘பெண்களுக்கு சொந்தமான/முன்னெடுக்கின்ற தொழில்களுக்கான’’ புதிய தேசிய வரைவிலக்கணத்தை உருவாக்குவதுடன், பெண்கள் முயற்சியாண்மையாளர்களின் திருத்தப்பட்ட வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு, நுண்பாக, சிறிய, மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான வெளிப்படுத்துகைகள் தொடர்பான பால் ரீதியாக வகைப்படுத்தப்பட்ட தரவுகளை அறிக்கையிடுவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

2024 செத்தெம்பர் 11 - பணிப்பாளர் சபைக்கான குறைந்தபட்ச சபை உறுப்பினர்களாக இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கு பத்து உறுப்பினர்களையும் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு ஒன்பது உறுப்பினர்களையும் தீர்மானித்து, ‘‘தெரிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபையின் குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை’’ மீதான வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் வழங்கப்பட்டது.

2024 செத்தெம்பர் 30 - தொடர்புடைய தரப்பினர்களுக்கான மேம்படுத்தப்பட்ட மேற்பார்வை உள்ளடங்கலாக, பிரதானமாக, பணிப்பாளர் சபையின் உள்ளமைப்பு மற்றும் சுயாதீனத்தை மேம்படுத்தல், சபையினுடைய

துணைக்குழுக்களின் செயற்றிறன்மிக்க தொழிற்படுத்தலை உறுதிசெய்தல், இடர்நேர்வு மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டு தொழிற்பாடுகளை மேம்படுத்தல், என்பனவற்றின் மூலம் உரிமம்பெற்ற வங்கிகளில் நிறுவன ஆளுகைச் செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் ''உரிமம்பெற்ற வங்கிகளுக்கான நிறுவன ஆளுகை'' மீது வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

2024 ஒத்தோபர் 01 - சாத்தியமான ஆர்வ முரண்பாடுகளை தணித்து, உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்புடைய தரப்பினர்களுக்கான மிகவும் சாதகமான நடத்தையை நீடிப்பதை தடுக்கும் நோக்குடன், உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்புடைய தரப்பினர்களையும் அத்தகைய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன்வசதி தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களை குறித்துரைத்தும் வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் வழங்கப்பட்டது. மேலும், இது தொர்டர்பில் வழங்கப்பட்ட முன்னைய பணிப்புரைகள் இரத்துச்செய்யப்பட்டன.

2024 ஒத்தோபர் 03 - உரிமம்பெற்ற வங்கிகளினால் அவ்வங்கிகளுடன் தொடர்புடைய தரப்பினர்களுக்கு வழங்கப்படும் கடன்வசதி தொடர்பில் அனுமதிக்கப்பட்ட வரையறைகளை குறித்துரைத்து வர்த்தமானி வெளியிடப்பட்டது.

2024 திசெம்பர் 03 - நடமாடும் வங்கித்தொழில் பிரிவுகளை தாபிக்கும் செயன்முறையை வலுப்படுத்தி, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மத்தியில் சீரான நடைமுறையைப் பின்பற்றும் நோக்குடன், ''உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் நடமாடும் வங்கித்தொழில் பிரிவுகளைத் தாபிப்பதற்கான வழிகாட்டல்கள்'' மீதான சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2024 திசெம்பர் 19 - சிறிலங்கா பாங்க்ஸ் அசோசியேசன் (கரண்டி) லிமிடெட்டினால் இணங்கப்பட்டவாறு, உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் கடந்தகாலத்தில் நிலவிய அசாதாரண பேரண்டபொருளாதார நிலைமைகள் என்பன காரணமாக பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரதொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரண வழிமுறைகளை எடுத்துக்காட்டி சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2024 திசெம்பர் 31 - ஊடகங்களில் தற்போது வெளியிடப்பட்டு வரும் வருடாந்த மற்றும் காலாண்டு நிதியியல் கூற்றுக்களிற்கான வெளியிடுகின்ற தற்போதுள்ள வெளியிடும் மாதிரிகளை எளிமைப்படுத்தி, தொடர்புடைய வங்கிகளின் ஊடக, ஆண்டறிக்கை மற்றும் வெப்தளங்களில், அவற்றின் காலாண்டு மற்றும் வருடாந்த நிதியியல் கூற்றுக்களுக்கான வெளியீட்டு மாதிரிகளை குறித்துரைத்து சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2025 சனவரி 01 - அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் சீரான முறையில் குறித்துரைக்கப்பட்ட நிவாரண வழிமுறைகளினை செயற்றிறன்மிக்கவாறான நடைமுறைப்படுத்தலை உறுதிப்படுத்தும் நோக்குடன் சுற்றறிக்கையின் உள்ளடக்கத்தை மேலும் தெளிவுபடுத்தி, ‘‘பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிவாரண வழிமுறைகள்’’ மீதான 2024ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான பின்னிணைப்பு வழங்கப்பட்டது.

இனிவரவிருப்பவை - உரிமம்பெற்ற வங்கிகளுக்கான நிறுவன ஆளுகை தொடர்பான பணிப்புரைகளுக்கான பின்னிணைப்பு.
வெளியிலிருந்து வியாபாரத் தொழிற்பாட்டு பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் மீதான பணிப்புரைகள்.
சந்தைத் தூண்டல் ஒன்றிணைப்பு மீதான கட்டமைப்பு.

**நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி, உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள்**

2024 சனவரி 05 - பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய மத்திய வங்கியின் ஆளுகைச் சபையானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொருட்டு 2024 சனவரி 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகர் ஒருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பேர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தலை நீடித்துள்ளது.

2024 பெப்புருவரி 13 - நிதிக் கம்பனிகளின் தொழில் மற்றும் கம்பனித் தொழிற்பாடுகள் நடத்தப்படும் விதம் பற்றி அல்லது வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கம் பற்றி கண்டறிவதற்காக நிதிக் கம்பனிகளின் தகவல்களை உரிய நேரத்தில், துல்லியமாகவும், சீராகவும் மற்றும் முழுமையாகப் பெற்றுக்கொள்வதை குறிக்கோளாகக் கொண்டு, காலாந்திர அறிக்கையிடல் தேவைப்பாடுகள் தொடர்பான பணிப்புரையொன்று வழங்கப்பட்டுள்ளது.

2024 மே 03 - முன்மதிமிக்க வரையறைகள் உள்ளடங்கலாக கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயம், கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை, கொடுகடன் இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பு போன்றவற்றை வகுப்பதன் மூலம் ஆற்றல்வாய்ந்த கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை தாபித்து கொடுகடன் இடர்நேர்வை இனங்காண்பதற்கும், அளவிடுவதற்கும், கண்காணிப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் செயற்றிறன்மிக்க முறைமை இருப்பதை உறுதிசெய்யும் நோக்குடன் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

2024 யூலை 05 - பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய, மத்திய வங்கியின் ஆளுகைச் சபையானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொருட்டு 2024 யூலை 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகர் ஒருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தலை நீடித்துள்ளது.

2024 யூலை 25 - வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பிற்கான முதன்மைத் திட்டத்தின் (முதன்மைத் திட்டம்) பாகமாக எல் பி பினான்ஸ் பிஎல்சியுடன் மல்டி பினான்ஸ் பிஎல்சியின் ஒருங்கிணைப்பைத் தொடர்ந்து, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் நிதித் தொழிலை கொண்டு நடாத்துவதற்கு மல்டி பினான்ஸ் பிஎல்சிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இலங்கை மத்திய வங்கி இரத்துச்செய்துள்ளது. மேலும், 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடும் சட்டத்தின் கீழ் மல்டி பினான்ஸ் பிஎல்சின் பதிவு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

2024 ஒத்தோபர் 22 - நிதித்தொழில் சட்டத்தின் 32(4)ஆம் பிரிவின் நியதிகளின்படி, ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்டிற்கு தீர்த்துக்கட்டுனரை நியமிப்பதற்கான கட்டளையொன்றை கொழும்பு வர்த்தக மேல் நீதி மன்றம் வழங்கியுள்ளது.

2024 ஒத்தோபர் 23 - நிதிக் கம்பனியின் பணிப்பாளர்கள் மற்றும் மூத்த முகாமைத்துவத்தின் ஊதியத்தில் நிலையான, நியாயமான மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துகின்ற குறிக்கோளுடன் ஊதியக் கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளது.

2024 நவெம்பர் 21 - வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல், விளம்பரங்களை வெளியிடுதல் மற்றும் வைப்புக்களின் கோரிக்கைக்கான ஊக்குவிப்புத் திட்டங்களை வழங்குதல் போன்றவற்றுக்கான நிபந்தனைகளை குறித்துரைப்பதன் மூலம் வைப்பாளர்களைப் பாதுகாத்தல், நிதிக் கம்பனிகளின் மத்தியில் நியாயமானப் போட்டித்தன்மையை ஊக்குவித்தல் போன்றவற்றை நோக்காகக் கொண்டு நிதிக் கம்பனிகளால் வைப்புக் கோருவது தொடர்பான பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

2024 நவெம்பர் 29 - தொழிற்பாட்டு இடர்நேர்வை அடையாளம் காணுதல், மதிப்பீடுசெய்தல், கண்காணித்து அறிக்கையிடல் அத்துடன் கட்டுப்படுத்தி குறைத்தல் என்பவற்றுக்காக நிதிக் கம்பனி தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ கொள்கை மற்றும் நடைமுறையை வடிவமைத்தல், தொழிற்பாட்டு இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் செயற்றிறன்மிக்க தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறைகள் என்பனவற்றின் மூலம் ஆற்றல்வாய்ந்த தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை தாபிக்கின்ற அதேவேளை வாடிக்கையாளர்களுக்கு தங்குதடையற்ற பணிகளை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கு தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

2024 திசெம்பர் 27 - ஒருங்கிணைப்பதற்கான முதன்மைத்திட்டத்தின் பாகம் 1இனை நிறைவுசெய்தவுடன், நடுத்தரகாலம் தொடக்கம் நீண்டகாலப்பகுதியில் மிகவும் நெகிழ்ச்சிதன்மைவாய்ந்த நிதிக் கம்பனித் துறையை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு முதன்மைத் திட்டத்தின் பாகம் IIஇன் திருத்தப்பட்ட கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. திருத்தப்பட்ட கட்டமைப்பானது 2025 மாச்சு 31 தொடக்கம் 2028 மாச்சு 31 வரையான மூன்று ஆண்டுகள் செயற்பாட்டுக் காலமாகக் கொண்டுள்ளது.

2025 சனவரி 05 - பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய, மத்திய வங்கியின் ஆளுகைச் சபையானது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொருட்டு 2025 சனவரி 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக

முதனிலை வணிகர் ஒருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் லிமிடெட்டின் இடைநிறுத்தலை நீடித்தது.

இனிவரவிருப்பவை - நடுத்தர காலம் தொடக்கம் நீண்டகாலப்பகுதியில் மிகவும் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த நிதிக்கம்பனி துறையை உறுதிசெய்வதற்காக முதன்மைத் திட்டத்தின் பாகம் IIஇன் திருத்தப்பட்ட கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தல்.

- நடப்பு சந்தை அபிவிருத்திகளுக்கமைவாக நிதித்தொழில் சட்டம் மற்றும் நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம் என்பவற்றிற்கான திருத்தங்கள் உள்ளடங்கலாக தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைத் திருத்தம்செய்தல்.
- வங்கியல்லாத் துறையின் உறுதிப்பாட்டினை மேம்படுத்துகின்ற அதேவேளை மேற்பார்வை மீளாய்வுச் செயன்முறையினை வலுப்படுத்துவதற்கு விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளைக் கொண்டுவருதல்.

**காப்புறுதி [4]**

2024 சனவரி 08 - சுற்றறிக்கை இல.30 மற்றும் 35இனை இரத்துச்செய்து, அதன் தேவைப்பாடுகளை ஒருங்கிணைக்கும் வகையில் 'மதிப்பீட்டாளர்களாக தகைமையடைவதற்கான பிரமாணம்' தொடர்பான 2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2024 சனவரி 09 - அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்கு இணங்காமை மற்றும் காப்புறுதித் தொழிற்துறை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்காமை தொடர்பில் 41ஆம் இலக்க சுற்றறிக்கையை இரத்துச்செய்து, 2024ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2024 பெப்புருவரி 01 - நீண்டகால காப்புறுதிச் சாதனங்களுக்கான உதவுதொகை கொள்கைகளின் குறைந்தபட்சக் காலப்பகுதியை மட்டுப்படுத்துவதற்கு 2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரை வழங்கப்பட்டது.

[4] இவை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகளாகும் என்பதுடன் 2025 மாச்சு 07 வரையிலான இற்றைப்படுத்தல்களைக் கொண்டுள்ளன.

2024 பெப்புருவரி 08 - 2016 ஏப்பிறல் 07ஆம் திகதியிடப்பட்ட இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் கடிதத்தின் 4ஆம் பந்திக்கமைவாக, இலங்கை காப்புறுதி நிறுவகத்திற்கு க.பொ.த சாதாரணதர மட்ட பரீட்சை பெறுபேறுகள் சரிபார்க்கப்படாத மற்றும் உறுதிப்படுத்தப்படாத தனிப்பட்டவர்களின் முகவராண்மை ஒப்பந்தங்களை இரத்துச்செய்வதற்கு அனைத்து காப்புறுதியாளர்களுக்கும் தரகர்களுக்கும் அவர்களை நெறிப்படுத்தும் விதத்தில் 2024ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரை வழங்கப்பட்டது.

2024 பெப்புருவரி 26 - மோட்டார் வாகனத்தில் ஏற்படும் விபத்துக்கள் - மரண அல்லது நிரந்தரமாக ஊனமுற்ற மூன்றாம் தரப்பு பாதிப்படைந்தவர்களுக்கான தெரிவுரீதியிலான இழப்பீட்டு திட்டம் தொடர்பாக பொது காப்புறுதி கம்பனிகளுக்கு 2024ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2024 மே 08 - ஆர்வலர்களுக்கான பங்குலாபங்களைப் (இடைக்கால பங்குலாபங்கள் உள்ளடங்கலாக) பிரகடனப்படுத்தி பகிர்ந்தளிப்பதற்கு முன்னர் பின்பற்றப்பட வேண்டிய நியதிகள் மற்றும் நிபந்தனைகளை எடுத்துக்காட்டி காப்புறுதியாளர்களுக்கு 2024ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க பணிப்புரை வழங்கப்பட்டது.

2024 மே 14 - செயற்றிறன்மிக்க மேற்பார்வைக்காக “காப்புறுதியாளர்கள், காப்புறுதி தரகர்கள் மற்றும் காப்புறுதி முகவர்களால் வெளியிடப்படும் விளம்பரங்கள்” தொடர்பில் தற்போதுள்ள வழிகாட்டல்களுக்கு பதிலீடாக அனைத்து காப்புறுதியாளர்கள், தரகர்கள் மற்றும் முகவர்களுக்கு 2024ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பணிப்புரை வழங்கப்பட்டது.

2024 மே 20 - அனைத்தையுமுள்ளடக்கிய மோட்டார் காப்புறுதி உள்ளடக்கத்தின் விளம்பரப்படுத்தலுடன்/ஊக்குவிப்புடன் இணைந்து மூன்றாம் தரப்பு மோட்டார் காப்புறுதியின் மூலம் மேற்கொள்ளப்படும் விளம்பரம்/ஊக்குவிப்பு, மேற்கொள்ளப்படுகின்ற சூழ்நிலை மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய காப்புறுதி உள்ளடக்கத்திற்கு வலியுறுத்தல் வழங்கப்படுகின்ற சூழ்நிலை தவிர மூன்றாம் தரப்பினரின் மோட்டார் காப்புறுதியின் விளம்பரத்தை/ஊக்குவிப்பை தடைசெய்து அனைத்து பொதுக் காப்புறுதிக் கம்பனிகளுக்கும் 2024ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 2024 ஓகத்து 09 | - | கொள்கைதாரர்களுக்கு வழங்கப்படும் கொள்கை ஆவணங்களில் அனைத்தையுமுள்ளடக்கிய விபரங்களை உள்ளடக்க வேண்டுமென அனைத்து நீண்டகால காப்புறுதி நிறுவனங்களுக்கும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. |
| 2024 ஓகத்து 22 | - | மீள்காப்புறுதி ஒருங்கேற்பாடுகள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய 2017இல் வழங்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளை திருத்தி, தொழிற்துறைக்கு நியதிகளும் நிபந்தனைகளும் வழங்கப்பட்டன. |
| | - | ''செல்லிட வலையமைப்பு தொழிற்படுத்திகள் மற்றும் நிலையான நிரல் தொழிற்படுத்திகள் (Fixed Line Operators') ஆகியவற்றின் தரவுகளின் பயன்பாடு மற்றும் தளத்தினூடாக, வாடிக்கையாளர்களுக்கு காப்புறுதிச் சாதனங்களை விற்பனைசெய்தல்'' தொடர்பான 2024ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணிப்புரை தொழிற்துறைக்கு வழங்கப்பட்டது. |
| 2024 செத்தெம்பர் 24 | - | ''காப்புறுதி கம்பனிகள் மற்றும் காப்புறுதி இடையீட்டாளர்களினால் வழங்கப்படும் காப்புறுதிச் சாதன தகவல் ஆவணம்'' தொடர்பாக 2024ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 2024 செத்தெம்பர் 25 | - | வெளிநாட்டு மருத்துவக் காப்புறுதிச் சாதனத்தின் இருப்பிற்காக அதிகாரமளிக்கப்பட்ட காப்புறுதி தரகர்களுக்கு (வெளிநாட்டு மருத்துவக் காப்புறுதி தொழிலிற்கான) பரிந்துரையை மேற்கொள்வதற்கு, பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி தரகர்களுக்கு அனுமதிவழங்குகின்ற ''வெளிநாட்டு மருத்துவக் காப்புறுதி'' தொடர்பான 11ஆம் இலக்க பணிப்புரையை இரத்துச்செய்து, 2024ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 2024 நவெம்பர் 04 | - | காப்புறுதித் தரகர்களுக்கு, குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள், (தேறிய மற்றும் குறிப்பிட்ட மூலதனம்), பதிவுக் கட்டணம், மீள்காப்புறுதி தரகர் தொழிலிற்கான தேவைப்பாடுகள் போன்றவற்றுடன் தொடர்புடைய புதிய விதிகள் வழங்கப்பட்டன. |

**மூலதனச் சந்தை** [5]

| | | |
|---|---|---|
| 2024 சனவரி | - | ஷரியா இணங்குவிப்பு படுகடன் பிணையங்களுடன் தொடர்புடைய விதிகள் இறுதிப்படுத்தப்பட்டு ஷரியா புலமையாளர்களுக்கான வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டன. |

[5] இவை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளாகும் என்பதுடன் 2025 மாச்சு 07 வரையிலான இற்றைப்படுத்தல்களைக் கொண்டுள்ளன.

| | | |
|---|---|---|
| | - | கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் உட்கட்டமைப்பு முறிகளை வழங்குவதையும் பட்டியலிடுவதையும் வசதிப்படுத்துவதற்காக ஒழுங்குமுறை கட்டமைப்பிற்கான ஒப்புதல் பெறப்பட்டது. |
| 2024 மார்ச் | - | பெறுதிச்சாதனங்களின் பரிமாற்றமொன்றை தாபிப்பதற்கான ஒப்புதல் பெறப்பட்டதுடன் முன்னெடுப்பை வழிநடத்துவதற்கான துணைக்குழு உருவாக்கப்பட்டது. |
| 2024 ஏப்பிறல் | - | தெரிவுசெய்யப்பட்ட ஷரியா புலமையாளர்களை ‘‘துணை பணி வழங்குநர்களாக’’ பதிவுசெய்வதற்கான ஒப்புதல் பெறப்பட்டது. |
| 2024 செத்தெம்பர் | - | பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஷரியா புலமையாளர்களினால் உருவாக்கப்பட்ட அனுமதிப்பட்டியல் குறியீடுகளுக்கான நியம ஷரியா இணங்குவிப்பு பிணையங்கள் திரையிடல் முறையியலை அங்கீகரிப்பதற்கு ஒப்புதல் பெறப்பட்டது. |
| | - | சமூக முறிகளை அறிமுகப்படுத்துவதற்கு கொள்கையளவில் ஒப்புதல் பெறப்பட்டது. |
| 2025 சனவரி | - | 2025 -2035 ஆம் ஆண்டுகளுக்கான மூலதனச் சந்தை உபாயத்திற்கான அனுமதி பெறப்பட்டது. |
| | | மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்களினால் தொழிற்படுத்தப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான செயலி தளங்களினூடாக வழிப்படுத்தப்படும் பங்கு கட்டளைகளின் கட்டளை பெறுமதியொன்றை அதிகரிப்பதற்கான அனுமதி பெறப்பட்டது. |

**ஏனைய நிதியியல் துறையுடன் தொடர்புடைய கொள்கை வழிமுறைகள்**

**உலக வங்கியின் நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் செயற்றிட்டம்.**

உலக வங்கியின் நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தலின் செயற்றிட்டத்தின் கீழ் உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கிடையில் பின்வரும் கடன் உடன்படிக்கைகள் கைச்சாதிடப்பட்டன.

| | | |
|---|---|---|
| 2024 சனவரி 31 | - | பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் நிதி அமைச்சுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட நிதியியல் உடன்படிக்கை[6] |

[6] உடன்படிக்கைகளில் கைச்சாத்திடும் போது, அமைச்சின் பெயர் ‘‘நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு’’ எனக் காணப்பட்டது.

2024 பெப்புருவரி 01 - பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட செயற்றிட்ட உடன்படிக்கை

2024 பெப்புருவரி 06 - நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு[6] மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட துணை உடன்படிக்கை

2024 ஏப்பிறல் 10 - ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையை வலுப்படுத்தி நிதியியல் வாடிக்கையாளர்களின் நியாயமான கையாளுகையை உறுதிப்படுத்துவதற்கு நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் கீழ் சந்தை நடத்தை மேற்பார்வை பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கு மத்தியில் சந்தை நடத்தை நியமங்களுடன் இணங்கி, கண்காணித்தல், மதிப்பீடுசெய்தல் மற்றும் நிறைவேற்றுதல் என்பனவற்றில் இப்பிரிவு முக்கிய பங்காற்றுகின்றது.

2024 மே 21 - இலங்கையின் நிதியியல் நடத்தையையும் தாக்குபிடிக்கும் தன்மையையும் மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு, நிதியியல் அறிவு முன்னெடுப்புக்களில் ஆர்வலர்களுக்காக ஒருமுகப்படுத்தப்பட்ட கொள்கை பணிப்புரையை வழங்குவதற்கு தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கீழ் இலங்கையின் நிதியியல் அறிவு வழிகாட்டல் (2024-2028) தொடங்கி வைக்கப்பட்டது.

2024 மே 30 - **இழப்பீட்டு கொடுப்பனவு பொறிமுறையின் வினைத்திறனையும் செயற்றிறனையும் மேம்படுத்தல்**

2022.08.29 அன்று திகதியிடப்பட்ட ‘உரிமம்பெற்ற வங்கிகளினால் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களை கட்டயமாகப் பதிவுசெய்தல்’ மீதான 2022ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளையும் 2022.09.02 அன்று திகதியிடப்பட்ட ‘வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்தல்’ மீதான 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதித் தொழில் சட்டப் பணிப்புரைகளையும் இரத்துச்செய்வதன் மூலம் 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) நியதிகளின் பிரகாரம் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களை கட்டாயமாகப் பதிவுசெய்தல் தொடர்பான 2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை இலங்கை மத்திய வங்கி வழங்கியது. இழப்பீட்டு கொடுப்பனவு செயன்முறையின் வினைத்திறனையும் செயற்றிறனையும் மேம்படுத்துகின்ற அதேவேளை வைப்பாளர்களை அடையாளப்படுத்தும்

செயன்முறையை எளிமையாக்குவதையும் இப்பணிப்புரை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், வைப்பாளர் வாரியிலான தரவுகளை சேகரித்தல் முறைமை அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிலும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் உரிமம்பெற்ற வங்கிகளுக்கிடையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2024 யூலை 17 - **நிதியியல் துறை உறுதிப்பாடு மற்றும் நெருக்கடி முகாமைத்துவதம்**
நெருக்கடி தயார்ப்படுத்தலை மேம்படுத்துவதற்கு வங்கித்தொழில் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் தீர்மான கட்டமைப்பை இலங்கை மத்திய வங்கி வலுப்படுத்தியது. இடர்பாடான நிதியியல் நிறுவனங்களை கையாள்வதற்கான முன்கூட்டிய அணுகுமுறையை உறுதிப்படுத்தி, உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் இலங்கையின் நிதியியல் உறுதிப்பாட்டு கட்டமைப்பு, அனைத்தையுமுள்ளடக்கிய தீர்மானக் கொள்கையின் அபிவிருத்தி ஒருங்கிணைக்கின்றது.

2024 யூலை 31 - **இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதியளிக்கப்பட்ட வைப்புக்களை மீளச்செலுத்துவது மீதான வழிகாட்டல்கள்**
உலக வங்கியின் நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் செயற்றிட்டத்தின் பாகமாக, பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் அணிசேர்கின்ற வகையில், இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதியளிக்கப்பட்ட வைப்புக்களை மீளச்செலுத்துவது மீதான புதிய வழிகாட்டல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கோரல்களை தாக்கல்செய்தல் மற்றும் செயன்முறைப்படுத்தல் நடைமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்தி துரிதப்படுத்துவதையும் காப்புறுதியளிக்கப்பட்ட வைப்பாளர்களுக்கு பெரும் நன்மைகளை வழங்குவதையும் இவ்வழிகாட்டல்கள் இலக்காகக் கொண்டுள்ளன. இதற்கமைய, இலங்கை மத்திய வங்கி நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் செயலாற்றம் அடிப்படையிலான நிபந்தனை 09இனை வெற்றிகரமாக அடைந்துள்ளது. இதன்மூலம், செயலாற்றம் அடிப்படையிலான நிபந்தனைக்கு ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதியங்களைப் பாதுகாக்குகின்றது.

2024 ஓகத்து 08 - 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதி 2023 ஓகத்து 08 அன்று வழங்கப்பட்டு, 2024 பெப்புருவரி 08 தொடக்கம் பகுதியளவில் நடைமுறைக்குவந்ததுடன் 2024 ஓகத்து 08 அன்று முழுமையாக நடைமுறைக்குவந்தது.

2024 ஒத்தோபர் 03 - **நிதியியல் உறுதிப்பாட்டு நிதியத்தைத் தாபித்தல்**
நெருக்கடி முகாமைத்துவத்தை மேம்படுத்தி தீர்மானக் குறிக்கோள்களை அடைவதற்கு, இலங்கை மத்திய வங்கியானது ரூ. 500 மில்லியன் கொண்ட பெயரளவு ஒதுக்கீட்டுடன் நிதியியல் உறுதிப்பாட்டு நிதியத்தை தாபித்தது. நிதியியல் துறை இடையூறுகளை

பரந்தளவிலான பொருளாதார நெருக்கடிகளாக அதிகரிக்காமல் இருப்பதை உறுதிசெய்து, வங்கிகளுக்கான தொடர்பை உருவாக்குவதை வசதிப்படுத்தி, அசாங்கத்தால் முறைமைசார் முக்கியத்துவம் அல்லது தாக்கத்தைக் கொண்ட உரிமம்பெற்ற வங்கிகளை மூலதனமாக்குதல் ஆகியவற்றை நிதியியல் உறுதிப்பாட்டு நிதியம் இலக்காக் கொண்டுள்ளது.

2024 நவெம்பர் 01 - இலங்கை பாங்க்ஸ் அசோசியேஷன்ஸ் லிமிடெட்டுடன் கொடுகடன் ஆலோசனை நிலையத்தின் நடவடிக்கைகளை மீளத்திருத்துவதற்கு தேவையான ஒருங்கேற்பாடுகளை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டது. இதன்மூலம், 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தும் குறிக்கோளிற்கு பங்களிப்புச்செய்கின்றது.

2024 திசெம்பர் 27 - **இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கான இறைப் பற்றாக்குறைக்கு நிதியிடல் ஒருங்கேற்பாடு**

இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கான இறைப் பற்றாக்குறைக்கு நிதியளித்தல் ஒருங்கேற்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் இலங்கை மத்திய வங்கியும் நிதி அமைச்சும் கைச்சாத்திட்டன.

- இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் அங்கத்துவ நிறுவனங்களுக்கு 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் (விசேட ஏற்பாடுகள்) - இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிர்வாக மற்றும் முகாமைத்துவத்தினை திருத்துவதற்கான 2024ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் (விசேட ஏற்பாடுகள்) வழங்கப்பட்டன.

**இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள்**

2024 சனவரி 11 - பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் குறித்த தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதித்து, 2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2366/19ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2024 பெப்புருவரி 07 - 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதியினால் (2312/78ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) வழங்கப்பட்ட 12(அ)ஆம் இலக்க ஒழுங்குவிதியை திருத்தம்செய்யும் வகையில், வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு முழுதாக மின்சாரத்தில் இயக்கப்படும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதித்து காலப்பகுதியை நீடிக்கும்விதத்தில் 2024ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2370/15ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2024 பெப்புருவரி 19 - அங்கீகாரமளிக்கப்பட்ட தொழிற்துறையொன்றினால் செயன்முறைப்படுத்துவதற்கு மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட தானியங்களை ஏற்றுமதி செய்வதற்கு (உ-ம்: மிளகு, சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி போன்றன) அனுமதிக்கும் விதத்தில் 2024ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2372/04ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)
*(இவ் ஒழுங்குவிதிகள் 2024 மாச்சு 19 அன்று நடைமுறைக்குவரும் வகையில் இரத்துச்செய்யப்பட்டன).*

2024 பெப்புருவரி 28 - 2022ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கொடுப்பனவு நியதிகள் (2278/21ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளினால் வழங்கப்பட்ட இறக்குமதிக்கான ஆவணங்களுக்கு எதிரான கொடுப்பனவு மற்றும் ஆவணங்களுக்கு எதிரான ஏற்பு கொடுப்பனவு நியதிகளின் முன் உறுதிப்படுத்தல் தேவைப்பாட்டுடன் தொடர்புடைய 6ஆம் இலக்க ஒழுங்குவிதியை நீக்கும் விதத்தில், 2024ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2373/28ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2024 மாச்சு 19 - பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் குறித்தத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கும் வகையில், 2024ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2376/14ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2024 மே 17 - சுற்றுலாத் துறைக்கான தெரிவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை இறக்குமதிசெய்வதை அனுமதித்து 2024ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2384/34ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2024 யூலை 18 - அனுமதிக்கப்பட்ட தொழிற்துறைகளுக்கான செயன்முறைப்படுத்தல் மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட தானியங்களை ஏற்றுமதிசெய்வதற்கு அனுமதித்து, 2024ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2393/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2024 ஓகத்து 21 - 2022ஆம் ஆண்டின் கொடுப்பனவு நியதிகள் மீதான இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை திருத்துவதன் மூலம் (2278/21ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது) அதிகாரமளிக்கப்பட்ட நபரொருவரின் மூலம் மூலதன/ செயற்றிட்டதுடன் தொடர்புடைய பொருட்கள் உள்ளடங்கலாக தெரிவுசெய்யப்பட்ட பொருட்களை இறக்குமதிசெய்வதை அனுமதித்து, 2024ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொடுப்பனவு நியதிகள் மீதான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதி வழங்கப்பட்டது (2398/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது).

2024 செத்தெம்பர் 11 - 2023ஆம் ஆண்டின் 02ஆம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் மூலம் வழங்கப்பட்ட ஒழுங்குவிதியை திருத்தம்செய்வதன் மூலம், (2312/78ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் தாபிக்கப்பட்ட மோட்டார் வாகன அசெம்ளி வசதிகளுக்காக, புத்தம் புதிய பகுதியளவில் இணைக்கப்பட்ட பாகங்களின் தொகுதியை (Semi Knocked Down kits) இறக்குமதிசெய்வதற்கு அனுமதித்து, 2024ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2401/21ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2024 திசெம்பர் 18 - 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளை (2312/78ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) திருத்தம்செய்வதன் மூலம் பொதுப் பயணிகள் போக்குவரத்து வாகனங்கள், சிறப்பு நோக்கம்கொண்ட வாகனங்கள் மற்றும் ஏனைய மோட்டார் பொருத்தப்படாத பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தற்காலிக இடைநிறுத்தத்தை நீக்கி, 2024ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2415/35ஆம் இலக்க

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது)
(2025 சனவரி 27 திகதியிடப்பட்ட 2025ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் வழங்கலுடன் இவ்வொழுங்குவிதி இரத்துச்செய்யப்பட்டது)

2025 சனவரி 27 - பொதுப் பயணிகள் போக்குவரத்து வாகனங்கள், சிறப்பு நோக்கம் கொண்ட வாகனங்கள், வர்த்தக அல்லது பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் ஏனைய மோட்டார் பொருத்தப்படாத பொருட்களை இறக்குமதிசெய்வது தொடர்பான தற்காலிக இடைநிறுத்தத்தை நீக்கி, 2025ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2421/04ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது)
(2025 சனவரி 31 திகதியிடப்பட்ட 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் வழங்கலுடன் இவ்வொழுங்குவிதி இரத்துச்செய்யப்பட்டது)

2025 சனவரி 31 - பொதுப் பயணிகள் போக்குவரத்து வாகனங்கள், சிறப்பு நோக்கம் கொண்ட வாகனங்கள், வர்த்தக அல்லது பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் ஏனைய மோட்டார் பொருத்தப்படாத பொருட்களை இறக்குமதிசெய்வது தொடர்பான தற்காலிக இடைநிறுத்தத்தை நீக்கி, 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன (2421/44 ஆம் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

**வரிச் சீராக்கங்கள்**

**வருமான வரி**

2024 மாச்சு 21 - உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கிரமமான அடிப்படையில் பகிரப்பட வேண்டிய தகவல்களைப் பரிந்துரைக்கும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்டது (2376/25ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). இதற்கமைய, பின்வரும் அரசாங்க நிறுவனங்கள்/நபர்கள் 2024 ஏப்பிறல் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் தகவல்கள் பகிரப்படுதல் வேண்டும்.

- பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் நாயகம்
- கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் கம்பனிகள் பதிவாளர் நாயகம்
- போக்குவரத்துத் திணைக்களத்தின் போக்குவரத்து ஆணையாளர் நாயகம்
- பொருட்கள், பணிகள் அல்லது ஆலோசனை மற்றும்

ஆலோசனையற்ற பணிகளை வழங்குவதற்கான ஒப்பந்தங்களை வழங்குவதற்குப் பொறுப்பான எந்தவொரு அரச நிறுவனத்தின் அலுவலர்கள்

- இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் உள்ளடங்கலாக ஏதேனும் நிதியியல் நிறுவனம்.
- கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் தலைவர்

2024 ஏப்பிறல் 04 - வரிக் கொடுப்பனவுகளின் முறையைப் பரிந்துரைத்து, வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்டது (2378/33ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

வரிக் கொடுப்பனவுகள் ஆணையாளர் நாயகத்திற்கு பின்வரும் முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மாத்திரம், மேற்கொள்ளப்பட வேண்டும்:

அ) காசை வைப்புச் செய்வதன் மூலம்

ஆ) கொடுப்பனவு கட்டளையின் மூலம் அல்லது வங்கி வரைவின் மூலம்

இ) இணையவழி வரிக் கொடுப்பனவுகள் தளம்

2024 திசெம்பர் 11 - 2414/14ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வர்த்தமானியில் தரப்பட்டுள்ள அட்டவணையில் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அத்தியாயம் VII இன் பிரிவு II இன் கீழ் வதிவற்றவர்களுக்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுப்பனவிலிருந்தான பிடித்துவைத்தல் வரி நடைமுறையை குறித்துரைத்து வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்டது.

வெளிமுகப் பணவனுப்பல்களில் ஈடுபட்டுள்ள அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கி மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் வெளிமுகப் பணவனுப்பலை மேற்கொள்கின்ற பிடித்துவைத்தல் முகவர்கள் 2025 சனவரி 1 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் அத்தகைய நடைமுறையுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

**பெறுமதிசேர் வரி**

2024 மாச்சு 20 - 2024ஆம் ஆண்டின் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் பெறுமதிசேர் வரி பதிவுசெய்தல் எல்லை ஆண்டிற்கு ரூ.60 மில்லியனிலிருந்து ரூ.80 மில்லியனிற்கு குறைக்கப்பட்டது (2024ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் (திருத்தம்) சட்டம்)

**கலால் தீர்வை**

2023 திசெம்பர் 31 - 2024 சனவரி 01 நடைமுறைக்குவரும் வகையில் பெற்றோல் மற்றும் டீசல் மீதான கலால் தீர்வை குறைக்கப்பட்டது. (2364/36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

| **விடயம்** | **திருத்தத்திற்கு முன்னரான வரி (லீற்றரொன்றிற்கு ரூ.)** | **திருத்தப்பட்ட வரி (லீற்றரொன்றிற்கு ரூ.)** |
|---|---|---|
| பெற்றோல் (92 ஒக்ரேன்) | 77.00 | 72.00 |
| பெற்றோல் (95 ஒக்ரேன்) | 77.00 | 72.00 |
| ஏனையவை | 77.00 | 72.00 |
| 10 மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) விஞ்சாமல் கந்தகத்தை உள்ளடக்கும் சிறப்பு டீசல் | 63.00 | 57.00 |
| 10 மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) விஞ்சி 500 மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) கந்தகத்தை உள்ளடக்கும் ஏனைய டீசல் | 56.00 | 50.00 |
| ஏனையவை | 63.00 | 57.00 |

2023 திசெம்பர் 31 - 2024 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் சிகரட்டுக்கள் மீதான கலால் தீர்வை திருத்தப்பட்டது (2364/36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

| **விடயம்**<br>**(சிகரெட்டொன்றின் நீளம்)** | **திருத்தத்திற்கு முன்னரான வரி (1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.)** | **திருத்தப்பட்ட வரி (1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.)** |
|---|---|---|
| 60 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 16,030 | 18,270 |
| 60 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 67 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 41,540 | 47,360 |
| 67 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 72 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 59,180 | 67,470 |
| 72 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 84 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 67,100 | 76,490 |
| 84 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சுபவை | 74,590 | 85,030 |

2023 திசெம்பர் 31 - 2024 சனவரி 01இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் குடிவகைகள் மீதான கலால் தீர்வை திருத்தப்பட்டது (2364/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

| விடயம் | திருத்தத்திற்கு முன்னரான வரி (மதுபான லீற்றரொன்றிற்கு ரூ.) | திருத்தப்பட்ட வரி (மதுபான லீற்றரொன்றிற்கு ரூ.) |
|---|---|---|
| விசேட சாராயம் | 6,000 | 6,840 |
| வெல்லப்பாகு, பனை, தேங்காய் மற்றும் பதப்படுத்தப்பட்ட சாராயம் | 6,420 | 7,320 |
| நாட்டில் தயாரிக்கப்படும் “வெளிநாட்டு” வெறியக்குடிவகை | 6,600 | 7,525 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தின் 5 சதவீதம் மற்றும் அதற்கும் குறைவான மோல்ட் மதுபானம் | 4,750 | 5,415 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தில் 5 சதவீதத்தை விடக் கூடுதலான மோல்ட் மதுபானம் | 4,980 | 5,680 |
| வைன் | 4,750 | 5,415 |
| சேக் | 1,300 | 1,480 |
| நாட்டில் தயாரிக்கப்பட்ட பால் சார்ந்த குடிவகை | 3,300 | 3,760 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தின் 4 சதவீதத்திற்கும் அதிகமல்லாமல் நாட்டில் தயாரிக்கப்பட்ட அப்பிள் பழச்சாற்றிலான குடிவகை | 3,600 | 4,105 |

2025 சனவரி 10 - 2024 சனவரி 11இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் சிகரெட்டுக்கள் மீதான கலால் தீர்வை திருத்தப்பட்டது (2418/43ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

| விடயம் (சிகரெட்டொன்றின் நீளம்) | திருத்தத்திற்கு முன்னரான வரி (1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.) | திருத்தப்பட்ட வரி (1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.) |
|---|---|---|
| 60 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 18,270 | 19,350 |
| 60 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 67 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 47,360 | 50,150 |
| 67 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 72 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 67,470 | 71,450 |
| 72 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 84 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை | 76,490 | 81,000 |
| 84 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சுபவை | 85,030 | 90,050 |

- ஆண்டு பணவீக்க சீராக்க குறியீட்டு முறையை அடிப்படையாகக் கொண்டு, 5.9 சதவீதத்தினால் 2025 சனவரி 11 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மோட்டார் வாகனங்கள் உள்ளடங்கலாக அனைத்து வரி விலக்கக்கூடிய பொருட்களுக்கான கலால் தீர்வை குறைக்கப்பட்டது (2418/43ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

2025 சனவரி 10 - 2025 சனவரி 11இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் குடிவகைகள் மீதான கலால் தீர்வை திருத்தப்பட்டது (2418/42ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

| விடயம் | திருத்தத்திற்கு முன்னரான வரி (மதுபான லீற்றரொன்றிற்கு ரூ.) | திருத்தப்பட்ட வரி (மதுபான லீற்றரொன்றிற்கு ரூ.) |
|---|---|---|
| விசேட சாராயம் | 6,840 | 7,244 |
| வெல்லப்பாகு, பனை, தேங்காய் மற்றும் பதப்படுத்தப்பட்ட சாராயம் | 7,320 | 7,752 |
| நாட்டில் தயாரிக்கப்படும் “வெளிநாட்டு” வெறியக்குடிவகை | 7,525 | 7,969 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தின் 5 சதவீதம் மற்றும் அதற்கும் குறைவான மோல்ட் மதுபானம் | 5,415 | 5,735 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தில் 5 சதவீதத்தை விடக் கூடுதலான மோல்ட் மதுபானம் | 5,680 | 6,015 |
| itd | 5,415 | 5,735 |
| சேக் | 1,480 | 1,567 |
| நாட்டில் தயாரிக்கப்பட்ட பால் சார்ந்த குடிவகை | 3,760 | 3,982 |
| சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தின் 4 சதவீதத்திற்கும் அதிகமல்லாமல் நாட்டில் தயாரிக்கப்பட்ட அப்பிள் பழச்சாற்றிலான குடிவகை | 4,105 | 4,347 |

2025 சனவரி 31 - 2025 சனவரி 01இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இலத்திரனியல் வாகனங்கள் மீதான கலால் தீர்வை திருத்தப்பட்டது (2421/42ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

**சுங்கத் தீர்வை**

2024 சனவரி 06 - சுங்க இறக்குமதித் தீர்வையின் தீர்வைத் தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் “6” ஆம் வகையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆறு வருடாந்த சமமான தவணைக்கட்டணங்களில் இரண்டாவது தவணைக்கட்டணம் 2024 சனவரி 06 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 1,222 தீர்வை மட்டங்களுக்கு அகற்றப்பட்டது (06/2023ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை/ 2365/51ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்).

2025 சனவரி 27 - “1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க கலால் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கலால் (விசேட ஏற்பாடுகள்) தீர்வையில் அத்தியாயம் 87இல் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளவாறு வாகனங்கள், பொறிகள் பொருத்தப்பட்ட வாகனங்களின் சட்டகம், கூறுகள் மற்றும் பாகங்கள் என்பவற்றின் இறக்குமதி ஏற்புடைத்தாகுமென” விவரிக்கப்பட்டவாறு சுங்கக் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 235) அட்டவணை “அ”இன் கீழ் இணைப்பு II இல் உள்ள விலக்களிப்புப் பட்டியலின் (இறக்குமதிகள்) 33ஆவது விடயத்தின் நீக்கம் 2023 மாச்சு 24ஆம் திகதியிடப்பட்ட 2324/49ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது.

(01/2025ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை/ 2421/05ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்).

2025 சனவரி 31 - பொது மற்றும் முன்னுரிமை அடிப்படையில் மோட்டார் வாகனங்களின் இறக்குமதி குறித்து ஏற்புடைய சுங்க இறக்குமதித் தீர்வை மீதான 50 சதவீத மிகைக்கட்டணமொன்று 2025 பெப்புருவரி 01இலிருந்து ஆரம்பிக்கின்ற விதத்தில் ஓராண்டு காலப்பகுதியொன்றிற்கு விதிக்கப்பட்டது (2421/43ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

**செஸ்**

2024 சனவரி 04 - இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் செஸ் தீர்வையுடன் தொடர்புடைய தீர்வைத் தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தினை வெளியிடுதல் (2365/50ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2024 செத்தெம்பர் 05 - சூலைக்கல், அனைத்து வகையான போர்ட்லேண்ட் சீமெந்து மற்றும் ஹைட்ராலிக் சீமெந்து என்பவற்றின் இறக்குமதி மீது ஏற்புடைய செஸ் தீர்வை 2024 செத்தெம்பர் 06இலிருந்து ஆரம்பிக்கின்ற விதத்தில் திருத்தப்பட்டதுடன் கற்பாறைகளின் இறக்குமதி மீது செஸ் தீர்வை விதிக்கப்பட்டது (2400/25ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

**துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை**

2024 சனவரி 01 - பெற்றோல், டீசல் மற்றும் வளமாக்கிகள் என்பன உள்ளடங்கலாக அத்தியாவசியப் பொருட்கள் மீது ஏற்புடைய துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை வீதங்கள் 2024 சனவரி 01 தொடக்கம் ஆரம்பிக்கின்ற விதத்தில் விலக்களிப்பட்டன (2364/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2024 மாச்சு 29 - குறித்துரைக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதி மீதான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வையின் ஏற்புடைய சலுகை வீதங்கள் மற்றும் பொருட்களின் பட்டியலிற்கு ஏற்புடைய விலக்களிப்புக்கள் என்பன இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் வெளியிடப்பட்டன (2377/39ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

**ஏனைய வரிகளும் தீர்வைகளும்**

2024 பெப்புருவரி 01 - கொழும்பு பன்னாட்டு விமானநிலையம் இரத்மலானை மற்றும் யாழ்ப்பாணப் பன்னாட்டு விமானநிலையம் என்பவற்றிலிருந்து தொழிற்பாடுகளை ஆரம்பிக்கின்ற விமானங்களிற்கு வானூர்தி மூலம் இலங்கையைவிட்டு வெளியேறுகின்ற ஆட்களுக்களிற்கான ஐ.அ.டொலர் 60 இனைக் கொண்ட கப்பலேற்றும் தீர்வையிலிருந்து ஐ.அ.டொலர் 30 இனைக் கொண்ட ஏற்புடைய சலுகை வீதமானது 2024 பெப்புருவரி 1இலிருந்து ஆரம்பிக்கின்ற ஓராண்டு காலப்பகுதியொன்றிற்கு நீடிக்கப்பட்டது (2369/27ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2024 மாச்சு 07 - ஐ.அ.டொலர் 60 இனைக் கொண்ட ஏற்புடைய தீர்வையிலிருந்து படகு மூலம் இலங்கையைவிட்டு வெளியேறுகின்ற ஆட்களுக்களிற்கு ஐ.அ.டொலர் 5 மற்றும் சொகுசுக் கப்பல் மூலம் இலங்கையைவிட்டு வெளியேறுகின்ற ஆட்களுக்களிற்கு ஐ.அ.டொலர் 20 இனைக் கொண்ட ஏற்புடைய சலுகை வீதங்கள் 2024 மாச்சு 07இலிருந்து ஆரம்பிக்கின்ற விதத்தில் 2026 திசெம்பர் 31 வரையான ஏறத்தாழ மூன்று ஆண்டு காலப்பகுதிக்கு வழங்கப்பட்டன (2374/19ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2025 மாச்சு 20 - சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புத் தீர்வைக்கு ஏற்புடைய பதிவுசெய்தல் எல்லை 2024 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் ஆண்டிற்கு ரூ.120 மில்லியனிலிருந்து ஆண்டிற்கு ரூ.60 மில்லியனிற்குக் குறைக்கப்பட்டது (2024ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புத் தீர்வை (திருத்தச்) சட்டம்).

2025 சனவரி 31 - மோட்டார் வாகனங்கள் மீதான ஆடம்பர வரிக்கான எல்லைகள் 2025 பெப்புருவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் திருத்தப்பட்டன (2421/41ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

**அரச செலவினம்**

2024 சனவரி 10 - செலவினத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் காலத்திற்குக் காலம் பொதுத் திறைசேரியினால் விடுக்கப்பட்ட முன்னைய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. செலவினங்களைக் குறைப்பதற்கும் நிறுவனங்களின் தன்மைக்கேற்ப செலவினக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் இது பணிப்புரைகளை வழங்கியது (01/2024ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை).

2024 பெப்புருவரி 19 - அஸ்வெசும நலன்புரி நன்மைக் கொடுப்பனவுத் திட்ட அட்டவணைகள் 2024 சனவரி 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன (2372/03ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2024 பெப்புருவரி 28 - அரசாங்கத்தின் வரையறுக்கப்பட்ட அரசிறை உருவாக்க வழிகள், அதிகரித்துச் செல்கின்ற செலவினம் மற்றும் சுருக்கமடைந்த இறை இடைவெளி என்பவற்றைக் கருத்திற்கொண்டு இறுக்கமான நிதியியல் ஒழுக்கவியலினைப் பேணுவதனையும், செலவினைக் கட்டுப்படுத்துவதனையும், வியாபார நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை நிச்சயப்படுத்துவதனையும் தொடருவதற்கான பணிப்புரைகள் குறித்து அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிற்குச் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது (01/2024ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை).

2024 மே 17 - அஸ்வெசும நலன்புரி நன்மைக் கொடுப்பனவுத் திட்ட அட்டவணைகள் 2024 யூன் 15 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன (2384/30ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

2024 யூலை 31 - உரிமம்பெற்ற வங்கிகளிலிருந்து அஸ்வெசும பயன்பெறுநர்களினால் பெறப்பட்ட அடகு முற்பணங்களிற்கான வட்டி உதவித்தொகையொன்றினை வழங்குவதற்கான சுற்றறிக்கையொன்று 2024 ஓகத்து 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் விடுக்கப்பட்டது (DFD/2024-2ஆம் இலக்க அபிவிருத்தி நிதிச் சுற்றறிக்கை).

2024 நவெம்பர் 06 - 2024ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் பகுதி VIIIஇன் 39ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட

நியதிச்சட்ட நிதியங்கள் தொடர்பிலான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. அரசியலமைப்பின் 149ஆவது உறுப்புரையின் பிரகாரம் குறித்ததொரு நோக்கத்திற்காக சட்டத்தினால் குறித்துரைக்கப்படாத நிதியங்கள் திரட்டு நிதியத்தில் வைப்பிலிடப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது (04/2024ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை).

2024 திசெம்பர் 21 - அஸ்வெசும நலன்புரி நன்மைக் கொடுப்பனவுத் திட்ட அட்டவணைகள் இக்கொடுப்பனவுத் திட்டத்திற்குப் பாராளுமன்றத்தின் ஒப்புதல் கிடைக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. (2415/66ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

**ஏனையவை**

2024 யூன் 18 - 2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்திற்குப் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது.

2024 ஓகத்து 08 - 2024ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்திற்குப் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது.

2024 ஓகத்து 09 - 2024ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க பொருளாதார நிலைமாற்றச் சட்டத்திற்குப் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது.